DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No.154/2024**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

| | | |
|---|---|---|
| Name | : | ராக்கு (P.w.5) |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 10th day of October 2025
( எதிரிகள் ஆஜர் ).

**முதல் விசாரணை :–**

நான் தற்போது புளியாண்டார் கோட்டையில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். தேதி, மாதம் ஞாபகமில்லை கடந்த 3 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மாலை 5 மணிக்கு மேல் புளியாண்டார் கோட்டை நாடக மேடை அருகே உட்கார்ந்திருந்தேன். அப்போது மாரி என்பவர் தனது மகனை சத்தம் போட்டுக் கொண்டிருந்தார். அப்போது ஜெயபிரியா அந்த இடத்திற்கு வந்து தன்னை தான் மாரி பேசுகிறார் என்று கருதி பிரியா மாரியின் தலைமுடியை பிடித்து இழுத்து தேவுடியா, அவுசாரி என்று திட்டினார். முருகனும், பழனியும் வந்து கம்பை எடுத்து வந்து மாரியை அடித்தார்கள். அப்போது அசா2 வந்து சத்தம் போட்ட பிறகு போய்விட்டார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எ.த.கு.வி –**

மாரி எனக்கு நாத்தனார் உறவுமுறை. சண்டை நடந்த இடத்திற்கும் எனது வீட்டிற்கும் இடையே 2 தெரு உள்ளது. நான் வீட்டில் இருக்கும்போது ஊரில் சண்டை நடந்தது என்று சத்தம் கேட்டுதான் சென்றேன் என்றால் நான் சங்கத்தில் கூட்டம் என்று சொன்னதால் நான் முன்னதாகவே நாடகமேடைக்கு சென்று அங்கு இருந்தேன். ஆஜர் எதிரிகளை மாரியும் அவரது குடும்பத்தார்களும் அடித்ததாக ஒரு வழக்கு உள்ளது என்றால் எனக்கு தெரியாது. சண்டை நடக்கும்போது 40, 50 நபர்கள் இருந்தார்கள் என்றால் நிறைய பேர் இருந்தார்கள், எவ்வளவு என்று சொல்லமுடியாது. மாரி குடும்பத்தை சார்ந்தவர்களும் எதிரிகள் குடும்பத்தார்களுக்கும் சண்டையாகி தள்ளுமுள்ளு ஏற்பட்டது என்றால் சரிதான். நான் சொல்வது போல் சண்டை நடந்த இடத்தில் நான் இல்லை என்றால் சரியல்ல. அசா1 எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No.154/2024**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

| | | |
|---|---|---|
| Name | : | வேலு (P.w.4) |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 10th day of October 2025

( எதிரிகள் ஆஜர் ).

**முதல் விசாரணை :–**

நான் தற்போது புளியாண்டார் கோட்டையில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்களும் உள்ளூர்காரர்கள்தான். தேதி, மாதம் ஞாபகமில்லை கடந்த 2023 ம் வருடம் ஒரு நாள் மாலை 5, 5.30 மணி இருக்கும் எனது மனைவி மாரி நாடக மேடை அருகே விளையாண்டு கொண்டிருந்த எனது மகன் கருப்புராஜாவை பார்த்து வேலை வெட்டிக்கு போடா என்றும் உனது தகப்பன் என்னை திட்டுகிறார் என்று சொல்லி கொண்டிருந்தார். அப்போது ஆஜர் எதிரி பிரியா அங்கு வந்துள்ளார். அவர் தன்னை பேசுகிறார் என்று சொல்லி எனதுமனைவி மாரியுடன் வாக்குவாதம் செய்துள்ளார். நான் உன்னை திட்டவில்லை எனது மகன் கருப்புராஜாவை திட்டுவதாக சொல்லி உள்ளார். அதற்கு பிரியா என்ற ஜெயபிரியா நீ என்னை தான் திட்டுகிறாய் என்று சொல்லி

எனது மனைவி மாரியை தலைமுடியை பிடித்து கீழே இழுத்தார். அந்த இடத்திற்கு முருகனும், பழனிச்சாமியும் வந்து எனது மனைவியை கட்டையால் முருகன் தலையில் அடித்துவிட்டார். அப்போது பானுபிரியா என்ற பெண் விலகவந்துள்ளார். அப்போது பானுபிரியாவை பழனிச்சாமி கட்டையால் இடது கையில் அடித்துவிட்டார். அப்போது நானும் வந்து விலக்கும்போது என்னையும் பழனிச்சாமியும், முருகனும் கட்டையால் தலையில் அடித்தார்கள். சுமதியும் வந்து எனது மனைவி மாரியை கையால் அடித்தார். சண்டை முடிந்து கிளம்பும்போது எதிரிகள் எங்களை பார்த்து இன்னைக்கு தப்பித்து விட்டீர்கள் என்னைக்கு இருந்தாலும் நாளப்பின்ன சிக்கத்தான் செய்வீர்கள் என்று சொல்லி சென்றார்கள். பின்னர் எனது மனைவி மாரியை வீரசோழன் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றேன். பானுபிரியாவை அவரது கணவர் ராமசாமி அழைத்து வந்தார்.

2. பின்னர் மேல்சிகிச்சைக்காக திருச்சுழி அரசு மருத்துவமனைக்கும், அதன்பிறகு அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கும் அனுப்பி அங்கு சிகிச்சையில் இருந்தோம். இது சம்பந்தமாக எனது மனைவி மாரி அசா1 வீரசோழன் காவல் நிலையத்தில் சென்று புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எ.த.கு.வி –**

சாட்சி பானுப்பிரியா எனது மகள் ஆவார். பிரபு, தனிக்கொடி, ராக்கு ஆகியோர் எனது உறவினர்கள் இல்லை அவர்கள் எனது ஊர்க்காரர்கள். எங்கள் குடும்பத்திற்கும் எதிரிகள் குடும்பத்திற்கும் பிரச்சனைக்கு முன்பு முன் பகை எதுவும் இல்லை என்றால் சரிதான். சம்பவ நாளில் எதிரிகளை அடித்து காயப்படுத்தியாக எங்கள் குடும்பத்தார் மீது வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். சண்டை நடக்கும்போது 40, 50 பேர் இருந்தார்கள் என்றால் சரியல்ல, எங்கள் குடும்பத்தார் மற்றும் எதிரிகள் தவிர எனது மகனுடன் இருந்தவர்கள் சம்பவ இடத்தில் இருந்தார்கள். சண்டை நடந்து முடிந்தவுடன் வீரசோழன் மருத்துவமனைக்கு சென்றோம், காவல் நிலையம் செல்லவில்லை.

நான் வீரசோழன் மருத்துவமனைக்கு சென்றவுடன் அங்கு வைத்து போலிசார் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். அங்கிருந்து எத்தனை மணிக்கு நானும் எனது மனைவியும் திருச்சுழி அரசு மருத்துவமனைக்கு வந்தோம் என்றால் 7.30 முதல் 8 மணியளவில் வந்தோம்.திருச்சுழி அரசு மருத்துவமனையில் எனது மனைவி ஒரு நாள் இரவு சிகிச்சையில் இருந்தார். திருச்சுழி அரசு மருத்துவமனையில் போலிசார் என்னையோ, எனது மனைவியிடமோ விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். அதன்பின்பு அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனையில் ஒரு நாள் பகல் சிகிச்சையில் இருந்தார். அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனையில் வைத்து போலிசார் வந்து விசாரித்தார்கள், அவர்களிடம் நாங்கள் எங்களுக்குள் பேசிக் கொள்கிறோம் என்று சொல்லி போலிசாரை திருப்பி அனுப்பி வைத்துவிட்டோம். சம்பவம் நடைபெற்று ஒரு மாதம் கழித்து புகார் கொடுத்தோம். அதற்கிடையில் போலிசார் எங்களை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் எதிரிகள் யாரும் என்னுடைய மனைவியையோ, பானுப்பிரியாவையோ அடித்து காயப்படுத்தவில்லை என்றால் சரியல்ல. நானும் எனது குடும்பத்தை சேர்ந்தவர்களும் எதிரிகளை அடித்து காயப்படுத்திவிட்டு அதில் ஏற்பட்ட தள்ளுமுள்ளுவில் கீழே விழுந்த காயத்தை வைத்து எதிரிகள் மீது புகார் கொடுத்தோம் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.